

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.05.2023) ஜப்பான் நாட்டின் ஒசாகாவில் வாழும் தமிழர்கள் உள்ளிட்ட இந்திய வம்சாவளியினரின் கலாச்சார சந்திப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு ஜப்பான் நாட்டைச் சேர்ந்த பரதநாட்டிய கலைஞர்களுக்கு சால்வை அணிவித்து நினைவுப் பரிசு வழங்கி சிறப்பித்தார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.5.2023) ஜப்பான் நாட்டின் ஒசாகாவில் வாழும் தமிழர்கள் உள்ளிட்ட இந்திய வம்சாவளியினரின் கலாச்சார சந்திப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு ஜப்பான் நாட்டின் முதல் பரதநாட்டிய கலைஞரான திருமதி அகிமி சகுராய் அவர்களுக்கு சால்வை அணிவித்து, நினைவுப் பரிசு வழங்கி சிறப்பித்தார். உடன் ஒசாகாவிற்கான இந்தியத் தூதர் நிகிலேஷ் கிரி மற்றும் திருமதி. சாந்தா ஸ்டாலின்

## இந்தியா - ஜப்பான் இடையே கலாச்சாரத் தொடர்புகள் தொடர வேண்டும்!

# தமிழ்நாட்டை நோக்கி முதலீட்டாளர்களை அழைத்து வாரீர்!

### ஒசாகாவில் நடைபெற்ற - இந்திய மக்கள் கலாச்சார சந்திப்பு நிகழ்ச்சியில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**ஒசாகா, (ஜப்பான்) மே.29-**

**ஒசாகாவில் நடைபெற்ற இந்திய மக்களின் கலாச்சார சந்திப்பு நிகழ்ச்சியில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார்.**

**அவ்வுரையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “இந்தியா - ஜப்பான் இடையேயான கலாச்சாரத் தொடர்புகள் தொடர வேண்டும்!” என்று குறிப்பிட்டார்.**

**மேலும் முதல்வர் அவர்கள் உரையாற்றுகையில், “தமிழ்நாட்டை நோக்கி முதலீட்டாளர்களை அழைத்து வாரீர்!” என்று வேண்டுகோள் விடுத்தார்.**

சென்னையில் 2024 ஜனவரி மாதம் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு அழைப்பு விடுத்திடவும், தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்க்கும் நோக்கிலும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளுக்கு அரசு முறை பயணம் மேற்கொண்டுள்ளார்.

சிங்கப்பூர் பயணத்தை முடித்துக் கொண்டு தற்போது ஜப்பானில் முதலமைச்சர் அவர்கள் அரசு முறை பயணம் மேற்கொண்டு வருகிறார்.

அதன் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் (27.5.2023) ஒசாகாவில் உள்ள இந்தியத் தூதரகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட கலாச்சாரச் சந்திப்பு நிகழ்ச்சியில், ஒசாகாவில் வாழும் தமிழர்கள் உள்ளிட்ட இந்திய வம்சாவளியினரை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சந்தித்துப் பேசினார்.

இந்த கலாச்சாரச் சந்திப்பு நிகழ்வில் நடைபெற்ற கலை நிகழ்ச்சியில் ஜப்பான் நாட்டைச் சேர்ந்த பரதநாட்டியக் கலைஞர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் நினைவுப் பரிசு வழங்கி கௌரவித்தார்.

இதில் குறிப்பிடத்தக்க அம்சமாக, ஜப்பான் நாட்டின் முதல் பரதநாட்டியக் கலைஞரான 84 வயதான திருமதி அகிமி சகுராய் அவர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் சால்வை அணிவித்து, நினைவுப் பரிசு வழங்கிச் சிறப்பித்தார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.5.2023) ஜப்பான் நாட்டின் ஒசாகாவில் வாழும் தமிழர்கள் உள்ளிட்ட இந்திய வம்சாவளியினரின் கலாச்சார சந்திப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றினார்.

இந்திய மக்களின் கலாச்சாரச் சந்திப்பு நிகழ்ச்சியில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :-

இந்தியத் தூதரகத்தின் சார்பில் நடைபெறும் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்வதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்த நிகழ்ச்சியை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள ஜப்பான் நாட்டின் ஒசாகாவிற்கான இந்திய கான்சுலேட் ஜெனரல் நிக்கிலேஷ் கிரி அவர்களுக்கும், உறுதுணையாக இருக்கும் தூதரக அதிகாரிகளுக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**தொழில் வளர்ச்சியில் கவனம்!**

ஏழு கோடி மக்கள் வாழும் தமிழ்நாட்டின் முதலமைச்சராக நான் வந்துள்ளேன். இந்தியாவுக்கே பெருமையும் வளமும் சேர்க்கும் மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. தமிழ்நாட்டின் தொன்மையையும், பழமையையும், கீழடியும், பொருநையும் இன்று உலகுக்கே அடையாளம் காட்டி வருகிறது. அப்படிப்பட்ட தமிழ்நாட்டின் முதலமைச்சராக உங்களை இங்கு சந்திக்க வந்திருக்கிறேன்.

பெண்கள் அனைவருக்கும் நகரப் பேருந்துகளில் இலவசப் பயணம் அனைத்து மாணவர்களையும் அனைத்துத் தகுதிகளும் கொண்டவர்களாக மாற்றும் ‘நான் முதல்வன் திட்டம்’ பள்ளிகளில் மதிய சத்துணவோடு காலையிலும் உணவு என, குழந்தைகள் மாணவர்கள் இளைஞர்கள் பெண்கள் ஆகிய அனைத்துத்தரப்பினரின்முன்னேற்றத்துக்காக திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி செயலாற்றி வருகிறது. எங்களின் இந்தத் திட்டங்களை இந்தியாவின் பிற மாநிலங்களும் பின்பற்றத் தொடங்கி இருக்கின்றன. இப்படிப்பட்ட நிலையில்தான், தொழில் வளர்ச்சியிலும் கவனம் செலுத்தி வருகிறோம். அதற்காக வருகின்ற 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில், உலக முதலீட்டாளர்கள் மாநாடு ஒன்றை மிகப் பெரிய அளவில் நடத்திட திட்டமிட்டு இருக்கிறோம். அதற்கு அழைப்பு விடுக்கத்தான், இந்தச் சுற்றுப்பயணம்.

நிசான், தோஷிபா, யமஹா, உள்ளிட்ட மிகப்பெரும் ஜப்பானிய நிறுவனங்கள், தங்கள் உற்பத்தித் திட்டங்களை தமிழ்நாட்டில் அமைத்துள்ளன. இந்தியாவுக்கும் ஜப்பானுக்குமான நட்பு என்பது பரந்த அடிப்படையில் செயல் சார்ந்ததாக இருக்க வேண்டும் என்று இந்திய அரசு நினைக்கிறது. வர்த்தக உறவுகளையும் தாண்டிய நட்புறவாக அவை அமைய வேண்டும். ஜப்பான் இந்திய நட்புறவானது, புதிய சகாப்தத்தை உருவாக்க வேண்டும் என்பதை நானும் வலியுறுத்த விரும்புகிறேன்.

2012ஆம் ஆண்டு இந்தியாவுக்கும் ஜப்பானுக்கும் இடையே ஆன ராஜதந்திர உறவுகள் ஏற்பட்டு 60 ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. ‘மீண்டும் ஜப்பான் துடிப்பான இந்தியா புதிய பார்வைகள் - புதிய பரிமாற்றங்கள்’ என்று அதற்குத் தலைப்பு தரப்பட்டு இரண்டு நாடுகளிலும் கலாச்சார விழாக்கள் நடைபெற்றன. இத்தகைய கலாச்சாரத் தொடர்புகள் தொடர வேண்டும்.

> பெண்கள் அனைவருக்கும் நகரப் பேருந்துகளில் இலவசப் பயணம் அனைத்து மாணவர்களையும் அனைத்துத் தகுதிகளும் கொண்டவர்களாக மாற்றும் ‘நான் முதல்வன் திட்டம்’ பள்ளிகளில் மதிய சத்துணவோடு காலையிலும் உணவு என, குழந்தைகள் மாணவர்கள் இளைஞர்கள் பெண்கள் ஆகிய அனைத்துத் தரப்பினரின் முன்னேற்றத்துக்காக திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி செயலாற்றி வருகிறது. எங்களின் இந்தத் திட்டங்களை இந்தியாவின் பிற மாநிலங்களும் பின்பற்றத் தொடங்கி இருக்கின்றன. இப்படிப்பட்ட நிலையில்தான், தொழில் வளர்ச்சியிலும் கவனம் செலுத்தி வருகிறோம். அதற்காக வருகின்ற 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில், உலக முதலீட்டாளர்கள் மாநாடு ஒன்றை மிகப் பெரிய அளவில் நடத்திட திட்டமிட்டு இருக்கிறோம். அதற்கு அழைப்பு விடுக்கத்தான், இந்தச் சுற்றுப்பயணம்.

ஜப்பானில் உள்ள இந்தியத் தூதரகமும், ஜப்பான் நாட்டின் ஒசாகாவிற்கான இந்திய கான்சுலேட் ஜெனரல் நிக்கிலேஷ் கிரி அவர்களும் சிறப்பாகப் பணியாற்றி, ஜப்பானில் உள்ள இந்தியச் சங்கங்களுக்கு இணைப்புப் பாலமாக இருப்பதற்கு பாராட்டும் நன்றியும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**தமிழ்நாட்டில் தொழில் துவங்க ஏற்ற சூழல்!**

இதற்கு முன்பு, மேயர்கள் மாநாட்டுக்கு 1997ஆம் ஆண்டும், சென்னை மக்களின் போக்குவரத்துத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான மெட்ரோ ரயில் திட்டம் மற்றும் ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்டத்துக்கு நிதி உதவி கேட்டு 2008ஆம் ஆண்டும், நான் ஜப்பானுக்கு வந்திருக்கிறேன்.

அப்படிப்பட்ட ஜப்பான் நாட்டில் உள்ள முதலீட்டாளர்களிடம் தமிழ்நாட்டில் நிலவும் தொழில் தொடங்குவதற்கு ஏற்றச் சூழல், வாய்ப்புகள் உள்ளிட்டவற்றை நீங்கள் எல்லாம் எடுத்துக் கூற வேண்டும். தமிழ்நாட்டை நோக்கி முதலீட்டாளர்களை அழைத்து வர வேண்டும் என்று அன்போடுகேட்டுவிடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கிருஷ்ணன், தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வே.விஷ்ணு, ஒசாகாவிற்கான இந்தியத் தூதர் நிகிலேஷ் கிரி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

# அத்திக்கடவு - அவிநாசி திட்டம்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேரில் ஆய்வு!

*திருப்பூர், மே 29-*

*திருப்பூர் மாவட்டத்தில் 428 ஏரி, குட்டைகள் தண்ணீர் நிரப்பப்பட்டு 8,151.71 ஏக்கர் விவசாய நிலங்கள் பயன்பெறும் வகையில் ஊத்துக்குளி ஒன்றியம் குன்னத்தூர் குளம், ஆதியூர் குளம், திருப்பூர் ஒன்றியம் மேற்குபகுதி குளம், ஈரோடு மாவட்டம், பெருந்துறை ஒன்றியம் கிரே நகர் - நீரேற்று நிலையம், நம்பியூர் ஒன்றியம் இமாம்பூண்டி நீரேற்று நிலையங்களில் அத்திக்கடவு - அவிநாசி திட்டத்தின் மூலம் நீரேற்றம் செய்வதை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினருமான மு.பெ.சாமிநாதன் நேரில் ஆய்வு மேற்கொண்டார்.*

*அமைச்சர் தெரிவித்ததாவது : தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். எந்தவொரு திட்டமானாலும் மக்களுக்கு தேவையான திட்டங்களை உடனடியாக மக்களுக்கு கொண்டு சேர்ப்பதில் முழுக்கவனம் எடுத்து அரசு செயல்பட்டு வருகிறது. அத்திக்கடவு அவிநாசி திட்டமானது பவானி ஆற்றில் காளிங்கராயன் அணைக்கட்டின் கீழ்புறத்திலிருந்து ஆண்டொன்றிக்கு 1.50 டி.எம்.சி உபரி நீரை நீரேற்று முறையில் நிலத்தடியில் குழாய் பதிப்பின் மூலம் கோயம்புத்தூர், திருப்பூர் ஈரோடு மாவட்டங்களில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகள் மொத்தம் 24,468 ஏக்கர் நிலம் பயன்பெறும் வகையில் 32 பொதுப்பணித் துறை ஏரிகள், 42 ஊராட்சி ஒன்றிய ஏரிகள் மற்றும் 971 குளம் குட்டைகள் நீர் நிரப்பும் வகையில் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.*

*இத்திட்டத்தினை நீரேற்று முறையில் செயல்படுத்திட தமிழ்நாடு அரசின் மூலம் ரூ.1756.88 கோடி மதிப்பீட்டில் பூர் வாங்க மற்றும் மேம்பாட்டுப் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் பிரதானப் பணிகள் தொடங்கப்பட்டு பணிகள் முடியும் தருவாயில் உள்ளது.*

*அத்திக்கடவு-அவிநாசி திட்டம் தற்போது 99.00% பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் MS குழாய் பதிக்கும் பணிகள் 267.5 கி.மீ. நீளத்திற்கு முடிவடைந்துள்ளது. மற்றும் HDPE குழாய்கள் பதிக்கும் பணிகள் தற்போத துரிதமாக நடைபெற்று வருகிறது. தற்சமயம் சுமார் 797.50 கி.மீ. அளவு HDPE குழாய் பதிக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மின் மாற்றிகள், VT பம்புகள், மின்மோட்டார்கள், சுவிட்ச்கியர் மற்றும் பேனல் போர்டு ஆகியவை அனைத்து நீர் உந்து நிலையங்களிலும் பொருத்தப் பட்டுள்ளது. என அமைச்சர் தெரிவித்தார்.*

*இதில் திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் அ.லட்சுமணன், அத்திக்கடவு - அவிநாசி திட்டத்தின் கண்காணிப்பு பொறியாளர் சிவலிங்கம், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், ஊத்துக்குளி ஒன்றிய பெருந்தலைவர் பிரேமா ஈஸ்வரமூர்த்தி, ஒன்றிய செயலாளர்கள் பி.பி.ஈஸ்வரமூர்த்தி, எஸ். விஸ்வநாதன், ராஜா, சுப்பிரமணி, பெரியசாமி, சின்னசாமி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஈ.தங்கராஜ், செயற்பொறியாளர்கள் எஸ்.மன்மதன், நரேந்திரன், உதவி செயற் பொறியாளர்கள் சங்கர், ஆனந்தி, வெங்கடாசலம், விஜயகுமார், வெங்கடாஜலபதி உள்பட கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.*

---

# அரியலூர் மாவட்டக் கழகக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் அறிவிப்பு!



அரியலூர் மாவட்ட கழகக் கூட்டம் இன்று (29.5.2023 - திங்கட்கிழமை) மாலை 04.00 மணிக்கு அரியலூர் புறவழிச்சாலையில் உள்ள ரிதன்யா மஹாலில் மாவட்ட கழக அவைத்தலைவர் சி.மாணிக்கம் தலைமையில், சுபா. சந்திரசேகர், (சட்ட திட்ட திருத்தக்குழு இணை செயலாளர்,) க. சொ.க.கண்ணன் (சட்டமன்ற உறுப்பினர்,) ச.அ.பெருநற்கிள்ளி (கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர்,) எம்.பி.பாலசுப்ரமணியன் தலைமை (செயற்குழு உறுப்பினர்) ஆகியோர் முன்னிலையில் நடைபெறவுள்ளது.

அதுசமயம் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அணி நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் கலந்துகொள்ள வேண்டுகிறேன்.

பொருள்: முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா.

கழக உறுப்பினர் சேர்க்கை.

கழக ஆக்கப்பணிகள்.

**அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர்**
செயலாளர்
அரியலூர் மாவட்ட தி.மு.க.